5th November 1966]

சிறையில் கைதி சாவு

* 459 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திருச்சி மத்திய சிறையில் கைதி யாரேனும் அடிபட்டு இறந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதியன்று காலையில் அறைக்கதவு திறந்துவிடப்பட்டபின் வெளி வந்த ஆண்டிசாம்பன் என்ற கைதி ஆதிமூலம் என்பவரிடம் முறைதவறி நடந்துக்கொண்ட சில கைதிகளைக் கண்டித்தார். காலைக் கஞ்சி வழங்கப்படும்போது ஆண்டியினல் கண்டிக்கப்பட்ட கைதிகள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வகையில் அவரைத் தங்கள் கைகளால் நையப்புடைத்தனர். அடிபட்டதன் காரணமாய் அக்கைதி கீழே விழுந்தார். சிறைச்சாலை மருத்துவ மனைக்கு ஆண்டி எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிர் இழந்தார்.

திரு. செ. மாதவன் : கைதிகளைக் காலையில் திறந்துவிட்ட போது ஒழுங்காகச் சொல்லவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். கையினல் அடித்ததனலே அவருடைய உயிர் போய் இருக்கக் கூடுமா ? இதுபற்றி மருத்துவ அதிகாரிகள் பரிசீலனை செய்தார்களா ? என்ன புலன் கண்டு பிடிக்கப்பட்டது ?

கனம் திரு. கோ. பூவராகன் : கஞ்சிக்கு வெளியில் விடப்பட்டார்கள். எல்லோரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். ஒருவரோடு ஒருவர் பேசுகையில் சட்டினி கேட்டார்கள். தகராறு முற்றி 6 பேர்களாகச் சேர்ந்து அடித்த காரணத்தினல் அவரது லங்ஸ் கிழிந்து இறந்திருப்பதாக டாக்டர்கள் பரிசோதனையின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

மீனவர் துயர்

* 460 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு தொழிலின்மையால் ஏற்பட்ட பஞ்சத்திற்கு நிவாரணமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

(இ) மீனவர்கள் மத்தியில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவன்கோடு தாலூகாக்களைச் சேர்ந்த ஒரு சில கிராமங்களில் 1965 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பலத்த காற்றுடன் விட்டு விட்டு மழை பெய்துகொண்டிருந்ததால் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல இயலவில்லை. இந்த மாதங்களுக்கு முந்திய மீன்பிடி பருவத்தின் போதும் மிகச் சொற்ப அளவில்தான் மீன்

[5th November 1966

பிடிக்கப்பட்டது. எனவே, அக்கிராமங்களில் பற்றுக்குறை நிலைமை 27-12-1965 முதல் 9-1-1966 வரையில் இரண்டு வார கால அளவுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாரம் ஒன்றுக்கு இரண்டு படி அரிசியும் ஐம்பது காசு மதிப்புக்கு மரவள்ளிக் கிழங்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

(இ) மீனவர்கள் அதிக அளவில் மீன்பிடிப்பது வசதியாக இருக்கும் விசைப்படகுகளும் மீன்பிடி வலைகளுக்கான நைலான் நூலும் தொகுதியாகவுள்ள மீனவர்களுக்கு உதவித்தொகை நலனைக் கொள்முதல் (subsidised hire purchase) அடிப் படையில் வழங்கப்படுகின்றன. வலைகளைப் பின்னுவதற்காக மீனவர்களுக்குக் குறைந்த விலையில் பருத்தி நூலும் வழங்கப் படுகின்றது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இவைதவிர புயல் சேதம், வெள்ளம், மீன் கிடைக்காமலிருத்தல் போன்ற இடர்கள் ஏற்படும் காலங்களில் மீனவர்களின் துயரத்தை உடனே தணிப்பதற்காக "மீனவர் துயர் தணிப்பு நிதி" என்கிற ஒரு நிதியை அரசாங்கம் அமைத்துள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த ஆண்டு ஏப்ரல் 30-ஆம்
10-00 a.m. தேதி அடித்த புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எல்லாம் அரசாங்கத்திலிருந்து ஓரளவுக்கு நன்மைகள் அளித்தார்கள், உபகாரம் செய்தார்கள், கடன் அளித்தார்கள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக அடித்த புயலினால் குறிப்பாக எனது பகுதியிலே உள்ளவர்கள் எல்லாம் குடும்பத்தோடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆகவே, அங்கேயெல்லாம் நிவாரணம் அளிக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : எப்பொழுதும் போல் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணமும் அளிக்கப்படுகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) DAMAGE CAUSED BY BREACH IN VIDUR RESERVOIR.

*** திரு. ஆ. தங்கவேலு :** கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, 3-11-1966-ல் ஏற்பட்ட கோடூரப் புயல், கடுமையான மழையின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலுள்ள வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பெருத்த சேதம் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பயங்கர நிலையைப்பற்றி விவாதிக்க மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பதற்காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.